

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் வழிகாட்டுதலின்படி மயிலாடுதுறை அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ)என்.செல்வராஜ் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜக.வீரபாண்டியன், மாவட்ட கழக துணை செயலாளர் எஸ்.செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி. சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் எஸ்.எஸ்.குமார், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,நகர நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு அவரது 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், சார்பு அணி அமைப்பாளர்கள் இரா. முருகையன், எஸ்.பால்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## உலகத் தரத்தில் ஆயுஷ் மருந்துகள் எனப் பேசும் ஒன்றிய அரசு;

# தமிழ்நாட்டின் மருத்துவப் பரிசோதனை கட்டமைப்புக்கு குறைந்த நிதியுதவி ஏன்?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக 9-

உலகத் தரத்தில் ஆயுஷ் மருந்துகள் எனப் பேசும் ஒன்றிய அரசு; தமிழ்நாட்டின் மருந்துப் பரிசோதனை கட்டமைப்புக்கு கிடைத்ததோ குறைந்த அளவிலான நிதியுதவி ஏன் என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ்குற்றம்சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், BRICS பாரம்பரிய. துணை மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவம் (TCIM) முன்னெடுப்பின் பின்னணியில், ஆயுஷ் மருந்துகளின் தர உறுதிப்பாடு, நச்சுத்தன்மை பரிசோதனை மற்றும் சர்வதேச தரநிலைப்படுத்தலை வலுப்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளதா என்று கேள்வி எழுப்பினார். மேலும், நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் மத்திய மருந்துப் பரிசோதனை ஆய்வகங்கள், தரப் பரிசோதனை வசதிகள் மற்றும் ஆய்வக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆதரவு குறித்த விவரங்கள். சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப ஆயுஷ் மருந்துகளைப் பரிசோதிப்பதற்கான கட்டமைப்பை வலுப்படுத்தவும், தமிழ்நாடு உள்ளிட்ட மூலிகை உற்பத்திப் பகுதிகளிலிருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளதா, அத்துடன் ஆயுஷ் மருந்துகளுக்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படும் தரச் சான்றிதழ்கள் மற்றும் அறிவியல் ரீதியான மதிப்பீட்டை ஊக்குவிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டார்.

ஆயுஷ் அமைச்சகம் அளித்த பதில் வருமாறு

(அ) 2026 ஜூலை 21 முதல் 24 வரை சண்டிகரில் நடைபெற்ற 16-வது BRICS சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தில், BRICS சுகாதாரக் கட்டமைப்பின் கீழ் பாரம்பரிய, துணை மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவம் (TCIM) தொடர்பான BRICS நிபுணர் பணிக்குழுவை அமைப்பதற்கான செயல்பாட்டு வரையறைகளை (Terms of Reference TOR) BRICS உறுப்பு நாடுகள் இறுதி செய்தன. அந்தப் பணிக்குழு பின்வரும் நோக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது:

(i) கொள்கை ரீதியான கலந்துரையாடல்களையும் அனுபவப் பகிர்வையும் ஊக்குவித்தல்;

(ii) ஆராய்ச்சி மற்றும் ஆதாரங்களை உருவாக்குவதில் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்:

(iii) திறன் மேம்பாடு, கல்வி சார் பரிமாற்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டாண்மையை மேம்படுத்துதல்;

(iv) டிஜிட்டல் ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வை முன்னெடுத்துச் செல்லுதல்;

(v) TCIM துறையில் புதுமைகளையும் சிறந்த நடைமுறைகளின் பரிமாற்றத்தையும் ஊக்குவித்தல்:

(vi) பாரம்பரிய மற்றும் பூர்வகுடி மக்களின் அறிவு மற்றும் பராமரிப்பு தொழில்நுட்பங்கள் மீதான அறிவுசார் சொத்துரிமை மற்றும் பயன்பாட்டு உரிமைகளை அங்கீகரித்துப் பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குவதில் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்;

(vii) TCIM அணுகுமுறைகள் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் முழுமையான நல்வாழ்வையும் ஊக்குவித்தல்.

(ஆ) ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் மருந்துப் பரிசோதனை ஆய்வகங்கள் முறையே உலக சுகாதார அமைப்பின் நல்ல உற்பத்தி நடைமுறைகள் (WHO-GMP) மற்றும் பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) உயர்தர அளவுகோல்களை அடைய உதவும் வகையில், ஆயுஷ் அமைச்சகம் 'Ayush Oushadhi Gunvatta Evam Utpadan Samvardhan Yojana (AOGUSY)' என்ற மத்தியத் துறைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு 16.03.2021 அன்று நிலைக்குழு நிதிக் குழுவின் (SFC) ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.122 கோடியாகும்.

நடப்பு 2026-27 நிதியாண்டில், தமிழ்நாடு அரசு மருந்துப் பரிசோதனை ஆய்வகத்திற்கு AOGUSY திட்டத்தின் கீழ், 'ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் மருந்துப் பரிசோதனை ஆய்வகங்களை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்' என்ற பிரிவில் .68,00,000 மானிய வழங்கப்பட்டுள்ளது. உதவி

(இ) மற்றும் (ஈ தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் ஆயுஷ் மருந்துகளின் சர்வதேச அங்கீகாரம் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தும் வகையில், அவற்றின் தரச் சான்றிதழ் மற்றும் அறிவியல் ரீதியான மதிப்பீட்டிற்கு ஆதரவளித்து, ஆயுஷ் மருந்துகளுக்கான தரக் கட்டமைப்பை வலுப்படுத்த ஆயுஷ் அமைச்சகம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

i. ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் மருந்துப் பரிசோதனை ஆய்வகங்கள் முறையே WHO-GMP மற்றும் NABL போன்ற உயர்தர அளவுகோல்களை அடைவதற்கு உதவும் வகையில், 'Ayush Oushadhi Gunvatta Evam Utpadan Samvardhan Yojana (AOGUSY)' என்ற மத்தியத் துறைத் திட்டத்தை ஆயுஷ் அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்திய தரநிர்ணய அமைப்பு (BIS), இந்திய தரக் கவுன்சில் (QCI) மற்றும் தொடர்புடைய அறிவியல் நிறுவனங்கள், தொழில்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களுடன் இணைந்து ஆயுஷ் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களுக்கான தரநிலைகளை உருவாக்கவும், அங்கீகாரம் மற்றும் சான்றிதழ் வழங்கவும் இத்திட்டம் ஆதரவளிக்கிறது.

ii. மருந்துகள் விதிகள், 1945-இன் விதிகள் 160A முதல் 1600 வரை உள்ள விதிகளின் கீழ், ஆயுஷ் மருந்துகளின் அடையாளம், தூய்மை, தரம் மற்றும் வீரியத்தைப் பரிசோதிப்பதற்கான மருந்துப் பரிசோதனை ஆய்வகங்களுக்கு ஆயுஷ் அமைச்சகம் அங்கீகாரம் வழங்குகிறது. தற்போது, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ள 118 தனியார் மருந்துப் பரிசோதனை ஆய்வகங்களுக்கு அமைச்சகம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதுதவிர, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் மருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் சட்டப்பூர்வ மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங் களில் 34 மருந்துப் பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன.



iii. ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதிக்கான மருந்தியல் ஆணையம் (PCIM&H), ஆயுஷ் மருந்துகளின் அடையாளம். தூய்மை மற்றும் வீரியத்தை நிர்ணயிப்பதற்கான அதிகாரப்பூர்வ ஆதாரங்களாக விளங்கும் மருந்தியல் தரநிலைகள் மற்றும் மருந்துக் குறிப்புகளை உருவாக்குகிறது. மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி இத்தரநிலைகளைப் பின்பற்று வது கட்டாயமாகும். ஆயுஷ் மருந்துகளுக்கான மேல்முறையீட்டு மருந்துப் பரிசோதனை ஆய்வகமாகவும் PCIM&H செயல்படுகிறது. மேலும், ஆயுஷ் மருந்துகளுக்கான தர உறுதிப்பாட்டு முறையை வலுப்படுத்தும் நோக்கில், தரநிலைப்படுத்தல், தரக் கட்டுப்பாடு மற்றும் பரிசோதனை முறைகள் குறித்து மருந்து ஒழுங்குமுறை அதிகாரிகள், மருந்து பகுப்பாய்வாளர்கள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினருக்கு தொடர்ந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் நடத்துகிறது.

iv. ஆயுஷ் அறிவியல் துறைகளில் அறிவியல் அடிப்படையிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், ஒருங்கிணைக்கவும், வடிவமைக்கவும், மேம்படுத்தவும் மற்றும் ஊக்குவிக்கவும் ஆயுஷ் அமைச்சகம் ஆராய்ச்சிக் கவுன்சில்களை அமைத்துள்ளது. இக்கவுன்சில்களின் ஆராய்ச்சிப் பணிகளில் மருத்துவ ஆராய்ச்சி, மருந்துத் தரநிலைப்படுத்தல், மருந்தியல் ஆராய்ச்சி, மருத்துவத் தாவர ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்தல், அடிப்படை ஆராய்ச்சி, மருந்துத் தயாரிப்பு ஆராய்ச்சி மற்றும் பொது சுகாதார ஆராய்ச்சி ஆகியவை அடங்கும்.

v. ஆயுஷ் மருந்துகளுக்கான உலக சுகாதார அமைப்பின் மருந்துப் பொருள் சான்றிதழ் (WHO-CoPP), மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பால் (CDSCO) வழங்கப்படுகிறது. மூலிகை மருந்துகளுக்கான WHO Technical Report Series (TRS) வழிகாட்டுதல்களுக்கு இணங்குகிறதா என்பதை உறுதி செய்வதற்காக, ஆயுஷ் பிரிவின் மருந்து ஆய்வாளர்கள், மாநிலங்கள் ஒன்றியப் பிரதேசங்களின் மருந்து ஆய்வாளர்கள் மற்றும் CDSCO அதிகாரிகள் இணைந்து உற்பத்தி நிலையங்களை ஆய்வு செய்த பின்னர் இந்தச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

vi. ஆயுஷ் ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில் (AYUSHEXCIL) மூலம் 'Ayush Quality Mark (AQM)' திட்டத்தை ஆயுஷ் அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கட்டமைப்பின் கீழ், WHO-GMP, Ayush Premium Mark மற்றும் பொருந்தக்கூடிய பிற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் உள்ளிட்ட தகுதிவாய்ந்த அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தரச் சான்றிதழ்கள் மற்றும் சட்டப்பூர்வ அனுமதிகள் பரிசீலிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட பின்னர் 'Ayush Quality Mark' வழங்கப்படுகிறது.

vii. நிர்ணயிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கு இணங்குவதை மூன்றாம் தரப்பு மதிப்பீட்டின் மூலம் உறுதிசெய்து, இந்திய தரக் கவுன்சில் (QCI) ஆயுஷ் மருந்துகளுக்கு 'Ayush Standard Mark' மற்றும் 'Ayush Premium Mark' ஆகியவற்றை வழங்குகிறது.

இவ்வாறு ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.



முத்தமிழ்றிஞர் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லாரா பிரேம் தேவ் ஏற்பாட்டில் அன்னை தெரசா முதியோர் இல்லத்தில் இரவு உணவினை கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், புலியகுளம் பகுதி கழக பொறுப்பாளர் இலா.தேவசீலன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, ஏர்போர்ட் ராஜேந்திரன், பீடம்பள்ளி சுரேஷ், சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சிபி.கே.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கணியூரில் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் பேரூர் கழக செயலாளர்கள் சசிகுமார் மோப்பிரிபாளையம், வேலுச்சாமி சாமளாபுரம், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சூலூர் ஆர்.பிரபு, ரமேஷ் பாலன், கே.பி.பாலசுப்பிரமணியம், கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர் கதிர்வேல், சூலூர் முன்னாள் செயலாளர் ராமசாமி, பொறுப்புக்குழு உறுப்பினர் கோபால்சாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க மல்லூர் பேரூர் தி.மு.க சார்பில் தமிழினத் தலைவர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பேரூர் கழக செயலாளர் என். சுரேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



திருவாரூர் அரசு போக்குவரத்து கழக பணிமனை நுழைவு வாயிலில் தொ.மு.ச மாவட்ட கவுன்சில் மற்றும் திருவாரூர் அரசு போக்குவரத்து கழக தொமுச கிளை சங்கத்தின் சார்பாகவும் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அறிவழகன் தலைமையிலும், பா. தமிழரசன், இராம.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையிலும் வாரை.பிரகாஷ், மலர்தூவி மரியாதை செய்தார். இந்நிகழ்வில் ரஜினி சின்னா, செபாஸ்டியன் ரோலி,போக்குவரத்து கழக தொமுச கிளை சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.